செ.வெ.எண்.373/2017 நாள்: 03.08.2017

**காஞ்சிபுரம் பாபு திரையரங்கத்தில் நடைபெற்ற குழந்தைகள் திரைப்பட விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் பாபு திரையரங்கத்தில் குழந்தைகள் திரைப்பட விழாவின் தொடக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி விழாவினை தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட ஆட்சியர் பேசியதாவது,

இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கம் சார்பில் தமிழகம் முழுவதும் பள்ளி மாணவ-மாணவிகளுக்கான குழந்தைகள் திரைப்பட விழா நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 03.08.2017 முதல் 05.08.2017 வரை 25 திரையரங்குகளில் 57 காட்சிகள் நடத்தப்படுகிறது. இத்திரைப்பட விழாவிழல் 4 திரைப்படங்கள் குழந்தைகளுக்காக திரையிடப்படுகின்றன. தன் மாற்றுத் திறனாளி நண்பனின் ஊனத்தை மாற்ற நீலமணி (Blue Bead) நிச்சயம் உதவும் என்பது மல்லியின் கனவு மற்றும் நம்பிக்கை அமையப்பெற்று, சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தம் திரைப்படமாக ‘மல்லி’யும், தன் நாட்டு அரசருக்கும் ஜப்பானிய தம்பதியருக்கும் இடையில் தொடர்பாளனாக விளங்கி, பல்வேறு மொழிகளை தெரிந்து வைத்திருப்பதின் பயனை தெளிவுப்படுத்தும் திரைப்படமாக ‘துபாஷி’யும், ஒரு நிலக்கிழார் மாற்றுத் திறனாளி தன் மகனை காப்பாற்றியதன் மூலம், மாற்றுத் திறனாளிகளுக்கான நிறுவனத்தை வெளியேற்றியதை நினைத்து வருந்துவதை சித்தரிக்கும் படமாக ‘எங்களாலும் முடியும்’-ம், கடும் புயலில் கரை ஒதுங்கிய முதலைக்கும், கடற்கரை கிராமத்தைச் சார்ந்த ஒரு சிறுவனுக்கும் உள்ள நட்பை விவரித்து, விலங்கினத்திடம் அன்பு செலுத்துவதை வலியுறுத்தும் திரைப்படமாக ‘முதலை’யும் என 4 திரைப்படங்கள் இவ்விழாவில் திரையிட்டு காட்டப்படுகிறது. நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் 24,500 மாணவ-மாணவிகள் இத்திரைப்படங்களை பார்வையிடுகின்றனர் என தெரிவித்தார்.

இவ்விழாவில் சென்னை குழந்தைகள் திரைபடச் சங்க உதவி விநியோக அலுவலர் திருமதி.வி.எஸ்.அகிலா, முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ர.திருவளர்செல்வி, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் திரு.ச.தயாளன், மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆய்வாளர் திரு.து.லோகநாதன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா.சுரேஷ் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**


2017
CHILDREN'S FILM SOCIETY, INDIA
(An autonomous body under Ministry of
and
cfsi